இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 339 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 04 – திங்கள்கிழமை 20 ஜூலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 339 : Thiruvalluvar Year - 2057 - Aadi 04 - Monday 20 July 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## தமிழ்த்தாயின் ஏக்கம் தீர — தலைமகன்

# பேரறிஞர் அண்ணா முழங்கிய இந்நாளே - “தமிழ்நாடு நாள்”!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூலை 20 -**

**தமிழ்த்தாயின் ஏக்கம் தீரத் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் “தமிழ்நாடு” என்ற பெயரினை அவையில் முழங்க, உறுப்பினர்கள் எல்லாம் ‘வாழ்க’ என வாழ்த்தி மகிழ்ந்த இந்த நாளே ‘தமிழ்நாடு நாள்’ என்று - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**



பேரறிஞர் அண்ணா அவர்களால் “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டப்பட்ட ஜூலை 18-ஐயொட்டி கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**1956ஆம் ஆண்டே மொழிவாரியாக மாநிலங்கள் பிரிந்தாலும் இந்த நிலம் ‘Madras State’ என்ற பெயரிலேயே தொடர்ந்தது.**

**எத்தனையோ முயற்சிகள், தீர்மானங்கள், போராட்டங்கள் நிகழ்ந்தும் எதுவும் மாறவில்லை.**

**1967ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது கழகம். முதலமைச்சரானார் நம் அண்ணா. வரலாற்றில் பொன்னாளாக நிலைபெற வந்தது அந்நாள்!**

**தமிழ்த்தாயின் ஏக்கம் தீரத் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘தமிழ்நாடு’ என்ற பெயரினை அவையினில் முழங்க, ஒட்டுமொத்த மாநிலத்தின் உணர்வினையும் எதிரொலிக்கும் வகையில் உறுப்பினர்கள் எல்லாம் ‘வாழ்க’ என வாழ்த்தி மகிழ்ந்த இந்த நாளே தமிழ்நாடு நாள்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.




### மேகதாது அணை பிரச்சினை குறித்து

# நாடாளுமன்றத்தில் விவாதிக்க தி.மு.க. நோட்டீஸ்!

## மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அளித்தார்!

புதுடெல்லி, ஜூலை 20 -

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் நாளை தொடங்கி, ஆகஸ்ட் 13ம் தேதி வரை நடைபெறவுள்ளது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் மொத்தம் 19 அமர்வுகளாக இந்தக் கூட்டத்தொடர் நடைபெற உள்ளது.

நீட் தேர்வு குளறுபடிகள், பெட்ரோல், டீசல் விலை உயர்வு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வு, மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுவது, நிதிப் பகிர்வு மற்றும் தமிழகத்திற்கு எதிரான மேகதாது அணைவிவகாரம்போன்றவற்றை தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எழுப்பத் திட்டமிட்டுள்ளன.



இதனையொட்டி, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாட்டு விவசாயிகளின் உரிமைகளை நிலைநாட்டிட நடுவர் மன்றம் அமைத்திட வலியுறுத்தி இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டின் நலன்களைப் பாதுகாக்கின்ற வகையிலும் - மாநில உரிமைகளைக் காக்கின்ற வகையிலும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வாக தி.மு.க. எம்.பி.க்களின் குரல் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒலித்திடும் என்றும் மற்றொரு தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், மேகதாது அணை பிரச்சினையை நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என தி.மு.க. சார்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது. தி.மு.க. மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு இந்த நோட்டீசை அளித்துள்ளார்.

# குடியுரிமையைத் தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு இல்லை!

## உச்சநீதிமன்றம் தகவல்!

*புதுடெல்லி, ஜூலை 20-*

*மேற்கு வங்கத்தில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் முடிவில் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்களுக்கு அரசின் நலத் திட்டங்கள் கிடைக்கவில்லை என குற்றஞ் சாட்டப்படுகிறது.*

*இந்தக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து மூத்த வழக்குரைஞர் கோபால் சங்கரநாராயணன் உச்சநீதிமன்றாத்தில் தாக்கல் செய்த மனு, தலைமை நீதிபதி சூர்யகாந்த் மற்றும் நீதிபதிகள் ஜாய்மால்யா பாக்சி, மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.*

*வழக்கை விசாரித்த நீதிபதிகள், குடியுரிமையைத் தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு இல்லை, எஸ்.ஐ.ஆர். பணிகளுக்குப் பிறகு வெளியான வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்பதற்காக குடியுரிமை இழந்ததாக கருதக்கூடாது என அறிவுறுத்தினர்.*



*மேலும், மேற்கு வங்க எஸ்.ஐ.ஆர். பணிகள் தொடர்பாக நிலுவையிலுள்ள வழக்குகள் வரும் ஆகஸ்ட் மாதம் விசாரிக்கப்படும் எனவும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.*

# ஜூலை 22 - காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம்!

*புதுடெல்லி, ஜூலை 20-*

*காவிரி மேலாண்மை ஆணையத்தின் 53 வது கூட்டம் டெல்லியில் வரும் 22ஆம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 52வது கூட்டம் கடந்த ஜூன் 23ம் தேதி டெல்லியில் நடைபெற்றது.*

*ஜூன் மாதத்திற்கான 9.19 டி.எம்.சி. மற்றும் ஜூலை மாதத்திற்கான 31.24 டி.எம்.சி. என மொத்தம் 40 டி.எம்.சி. காவிரி நீரை கர்நாடகா உடனடியாகத் திறந்து விட வேண்டும் என்று தமிழக அரசு தரப்பில் வலியுறுத்தப்பட்டது.*

*ஆனால், தங்களின் அணைகளில் போதிய நீர் இருப்பு இல்லை எனக் கூறி, தமிழக அரசின் கோரிக்கையை ஏற்க கர்நாடக அரசு மறுத்தது.*

*இரு மாநிலங்களின் வாதங்களையும் பரிசீலித்த காவிரி மேலாண்மை ஆணையம், தண்ணீர் திறப்பு குறித்த இறுதி முடிவை அடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைத்தது.*

*இந்நிலையில், காவிரி மேலாண்மை ஆணையத்தின் 53 வது கூட்டம் டெல்லியில் வரும் 22ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

### இந்தியாவின்

# முதல் தனியார் ராக்கெட் விண்ணில் பாய்ந்தது!

## அறிவியல், கலைப்படைப்புகளுடன் அனுப்பப்பட்டது!

*ஸ்ரீஹரிகோட்டா, ஜூலை 20 -*

*இந்தியாவின் முதல் தனியார் ராக்கெட்டான “விக்ரம்1” ஸ்ரீஹரி கோட்டா ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.*

*ஐதராபாத்தைச் சேர்ந்த ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் என்ற ஸ்டார்ட்அப் நிறுவனம் “விக்ரம்1” ராக்கெட்டை முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைத்துத் தயாரித்துள்ளது.*

*சுமார் 22 மீட்டர் உயரமும், 1.7 மீட்டர் விட்டமும் கொண்டதாக இந்த ராக்கெட் வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*இந்த ராக்கெட், புவியின் கீழ்வட்டப் பாதைக்கு சுமார் 350 கிலோ வரையிலான சிறிய செயற்கைக்கோள்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்டதாகும்.*



*இதன் முதல் 3 நிலை என்ஜின்கள் திட எரிபொருளாலும், 4 நிலை, செயற்கைக்கோள்களைத் துல்லியமான சுற்றுப் பாதையில் செலுத்த உதவும் திரவ எரிபொருளால் இயங்கும் என்ஜினை கொண்டதாகும். திட்டமிட்டபடி காலை 11:30 மணிக்கு ஏவப்பட வேண்டிய இந்த ராக்கெட், சிறிய தொழில்நுட்பக் காரணங்களால் 35 நிமிடங்கள் தாமதமாக, மதியம் 12:05 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் வெற்றிகரமாகப் பாய்ந்தது.*

*ராக்கெட் ஏவப்பட்ட 16 நிமிடங்களில், அதன் செயல்பாடுகள் வெற்றிகரமாக நிறைவேறியதாக ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் அறிவித்துள்ளது.*

*விண்வெளியில் ராக்கெட்டின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் ஸ்கைரூட் நிறுவனத்தின் சொந்த தயாரிப்பான SCOPE எனும் செயற்கைக்கோள் 60 டிகிரி சாய்வு கொண்ட புவிவட்டப் பாதையில் செலுத்தப்பட்டது.*

*அத்துடன் விண்வெளிக் கழிவுகளை அகற்றும் தொழில்நுட்பத்தை ஆய்வு செய்ய Cosmoserve நிறுவனத்தின் ரோபோடிக் கை, ஊசி துவாரத்தின் உள்ளே 18 கேரட் தங்கத்தால் செதுக்கப்பட்ட சர் சி.வி. ராமன், விக்ரம் சாரா பாய் மற்றும் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஆகியோரின் மிகச்சிறிய சிலைகள், ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட வைரங்களால் செய்யப்பட்ட தாமரை வடிவ விண்வெளி கலைப் படைப்பு உள்ளிட்டவையும், அவற்றுக்கான நிர்ணயிக்கப்பட்ட புவிவட்டப் பாதைகளில் செலுத்தப்பட்டதாகவும் ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் தெரிவித்துள்ளது.*